அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள்ஜோதி

மார்ச் 2020 சன்மார்க்க மாத இதழ் விலை ரூ.10/-



# திருக்குறள் - சன்மார்க்க உரை

–திரு.சீனிசட்டையப்பனார்

## சுற்றந் தழால்

(மானுட வாழ்விற்கான அகப்புறச் சொந்தங்களை அரவணைத்துச் செல்லும் ஆன்ம இயல்பு )



**பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்**
**‘சுற்றத்தார் கண்ணே யுள. 521**

அகப்புற சொந்தம் சுற்றத்தினரை அகப்புறத் துற உண்டாயினும் கண்ணோடுதல் வேண்டும்.

**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவுந் தரும். 522**

இல்லறத்தான் ஒருவனுக்கு மனித உயிர் நேயம் காரணம் உண்டாகும் சொந்தங்களால் ஆன்ம வளம் கொழிக்கும்.

**அளவளா வில்லாதான் வாழ்க்கை**
**குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று. 523**

ஆன்மப் பண்புடன் கலந்து அகமுவந்து உரைய வல்லான் இல்லையாயின் குளத்தில் கரையின்றி நீர் சேமித் வைத்ததை ஒக்கும்.

**சுற்றத்தால் சுற்றப் பட ஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன். 524**

ஆன்மிக வளம் பெற்றான் ஒருவன்தத்துவச் சுற்றங்களாலு தார்மீகச் சுற்றங்களாலும் பேணப்படும் மெய்யறிவுடையவ ஆவான்.

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும். 525**

உபகார உணர்வும் ஈரம் அளைந்த இன்சொல்லும் இருப்பி அடுக்கடுக்கான அகப்புறச் சுற்றங்கள் உண்டாகி வளம் பெருகும்.

**பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத்து இல். 526**

அகத்து வேக்காடாம் கோப எரிப்பின்றி வாழ்ந்த வேண்டிய எல்லாம் வழங்கும் ஒருவனின் உயர்வுக்கு ஈடாக யாரு இருக்கமாட்டார்கள்.

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள. 527**

காகம் உறவு கலந்து உண்ணும் குணம் உடையது அவ்வாறே ஆன்ம நேய ஒருமைப்பாட்டினது வழி பகுத்துண் பல்லுயிர் ஓம்புதல் ஒருமை வளமுடைய செயலாய் அமையும்.

**பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர். 528**


சமத்துவம் சமயப் பொதுமை எனப் பிரித்தறிய வாழ்க்கையின் நட்புடைமையும் இருந்துவிட்டால் அத்தகைய நல்லா தகுதிக்காகப் பலர் சுற்றமாகி வாழ்வார்கள்.

**தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும். 529**

ஆன்மநேயச் சகோதரனாகி தத்துவ சேட்டைகளினின் விடுபட்ட ஒருவனால்தான் நேயம் பலவும் நிலைக்க வ உருவாகும்.

**உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்திருந்து எண்ணிக் கொளல். 530**

மனம் மாச்சரியம் காரணமாகத் தற்துறந்து தகவின்றி சென்ற ஒருவன் எண்ணிப்பார்த்து இரக்க செயலுக்கு ஒத்துழைக் வேறுபாட்டை விட்டு விடுவானானால் அவனை ஒட் இணைத்துக் கொண்டு வாழ்வினைப் பாதுகாத்து ஓம்புத வேண்டும்.



## திருவருட்பா முதற்பதிப்பு

வள்ளற்பெருமானால் பாடப்பெற்ற பாடல்கள் திருவருட்பா ஆகும். அது ஆறாயிரம் பாடல்களைக் கொண்டது. இப்பாடல்கள் ஆறு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.


திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பு **1867** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியாயிற்று. அதனை வெளியிட்டவர்கள் புதுவை வேலு, சிவானந்தபுரம் செல்வராயர், இறுக்கம் இரத்தினம் முதலியார் ஆகிய மூவராவர். இவர்கள் வள்ளலாரின் சென்னை நண்பர்கள்.

வள்ளலார் எழுதிய அருட்பாடல்களை அச்சிட வேண்டும் என்று வேண்டி அனுமதி பெற்றவர் இறுக்கம் இரத்தினம் முதலியார் ஆவார். அப்பாடல்களைத் திருவருட்பா எனப் பெயரிட்டு வகுத்தும், தொகுத்தும் **1867** ஆம் ஆண்டு முதல் நான்கு திருமுறைகளைப் பதிப்பித்தவர் தொழுவூர் வேலாயுதனார்.

ஐந்தாம் திருமுறை **1880** ஆம் ஆண்டு அவரால் பதிப்பிக்கப் பெற்றது. ஆறாம் திருமுறை **1885** ஆம் ஆண்டு தி.க. சுப்பராயரால் வெளியிடப்பட்டது.

**தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்**
**உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்– கண்மணியாம்**
**நங்கள் இராமலிங்கன் நல்ல அருட்பா முறையைத்**
**துங்கமுற மாணா தொழு.** **–சிதம்பர சுவாமிகள்.**

சென்ற மாதத் தொடர்ச்சி...



# மகாத்மா காந்தியின் சுயசரிதை...

-மூன்றாம் பாகம்

## 5. குழந்தைகளின் படிப்பு

*1897* ஜனவரியில், டர்பனில் நான் இறங்கியபோது என்னுடன் மூன்று குழந்தைகள் இருந்தார்கள். என் சகோதரியின் பத்து வயதான மகன் ஒருவன்; ஒன்பது வயதும், ஐந்து வயதும் உள்ள என் புத்திரர்கள் இருவர். இவர்களை எங்கே படிக்க வைப்பது?

ஐரோப்பியக் குழந்தைகளுக்கு என்று இருக்கும் பள்ளிக் கூடங்களுக்கு நான் அவர்களை அனுப்பியிருக்கலாம். ஆனால், என் குழந்தைகளுக்குச் சலுகை அளித்து, விதிவிலக்குப் பெற்றால்தான் அங்கே சேர்த்துக் கொள்ளுவார்கள். வேறு எந்த இந்தியரின் குழந்தைகளையும் அப் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளுவதில்லை. இந்தியக் குழந்தைகளுக்கென்று, கிறிஸ்தவப் பாதிரிகள் வைத்திருக்கும் பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் கல்வி எனக்குப் பிடிக்கவில்லையாகையால் என் குழந்தைகளை அங்கே அனுப்ப நான் தயாராக இல்லை. இதற்கு ஒரு காரணம், அங்கே ஆங்கிலத்திலேயே எல்லாப் பாடங்களும் போதிக்கப்பட்டு வந்ததாகும். இல்லாவிட்டால், பிழையான தமிழ் அல்லது ஹிந்தியில் போதிப்பார்கள். இதையும் கஷ்டத்தின் பேரில் தான் ஏற்பாடு செய்யவேண்டி இருந்திருக்கும். இதையும் மற்ற அசௌகரியங்களையும் சமாளித்துக்கொண்டு போக என்னால் முடியாது. இதற்கு மத்தியில் இக் குழந்தைகளுக்கு நானே போதிப்பது என்று சொந்த முயற்சியும் செய்து கொண்டிருந்தேன். ஆனால், நான் சொல்லிக்கொடுப்பது என்றால் ஒழுங்காகச் சொல்லிக் கொடுப்பதாக இருக்கமுடியாது. தக்க குஜராத்தி உபாத்தியாயரும் எனக்குக் கிடைக்கவில்லை.

ஆகையால், என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தேன். என் மேற்பார்வையில், குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்க ஓர் ஆங்கில உபாத்தியாயர் தேவை என்று விளம்பரம் செய்தேன். இந்த உபாத்தியாயர் ஒழுங்காக ஏதாவது சொல்லிக்கொடுத்துக் கொண்டு

வரவேண்டும். மற்றப்படிப்பு விஷயங்களைப் பொறுத்தமட்டும் எனக்கு ஒழிந்தபோது அப்போதைக்கப்போது நான் சொல்லிக் கொடுப்பதோடு குழந்தைகள் திருப்தியடைய வேண்டியதே என்று முடிவு செய்தேன்.

ஆகவே ஓர் ஆங்கில மாதை, மாதம் ஏழு பவுன் சம்பளத்தில், குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க அமர்த்தினேன். இந்த ஏற்பாடு கொஞ்சகாலம் நடந்து வந்தது. ஆனால், எனக்கு இது திருப்திகரமாக இல்லை; நான் எப்பொழுதும் குழந்தைகளுடன், தாய்மொழியிலேயே பேசிப் பழகி வந்தேன். இதனால், அவர்களுக்குக் கொஞ்சம் குஜராத்தி தெரிய வந்தது. குழந்தைகளைத் திரும்ப இந்தியாவிற்கு அனுப்பிவிடுவதற்கும் எனக்கு விருப்பம் இல்லை. ஏனெனில், சிறு குழந்தைகளைப் பெற்றோரிடமிருந்து பிரிக்கவே கூடாது என்று, அந்த நாளிலிருந்தே நான் கருதிவந்தேன்.

ஒழுங்கான ஒரு குடும்பத்தில், குழந்தைகள் இயற்கையாகவே அடையும் கல்விப் பயிற்சியை, மாணவர்களின் விடுதிகளில் அவர்கள் அடைய முடியாது. ஆகையால், என் குழந்தைகளை என்னுடனேயே வைத்துக்கொண்டேன். என் சகோதரியின் மகனையும் என் மூத்த மகனையும், இந்தியாவில் மாணவர்கள் தங்கிப் படிக்கும் ஒரு பள்ளிக்குக் கொஞ்சகாலம் அனுப்பினேன். ஆனால், சீக்கிரத்திலேயே அவர்களைத் திருப்பி அழைத்துக் கொண்டுவிட வேண்டியதாயிற்று. பிறகு என் மூத்த மகன், வயதடைந்த வெகு காலத்திற்குப் பிறகு, என்னிடம் மனஸ்தாபம் கண்டு, இந்தியாவுக்குப் போய்விட்டான்.

அங்கே அகமதாபாத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தான். ஆனால் என் மருமகனோ, என்னால் கொடுக்க முடிந்த கல்வியோடு திருப்தியடைந்துஎன்னுடனேயே இருந்துவிட்டான் என்று ஞாபகம். நல்ல வாலிபப் பருவத்தில் அவன் துரதிருஷ்டவசமாகச் சிறிது காலம் நோயுற்றிருந்து இறந்து போய்விட்டன். என் குமாரர்களில் மற்ற மூவரும் பொதுப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்ததே இல்லை. ஆனால் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு இருந்தவர்களின் குழந்தைகளுக்கென்று நான் ஆரம்பித்துச் சிறிது காலம் நடத்திக்கொண்டிருந்த வசதிக் குறைவான பள்ளிக்கூடங்களில் இவர்கள் சிறிது காலம் ஒழுங்காகப் படித்து வந்தனர்.

இந்தப் பரிசோதனைகளெல்லாம் அரைகுறையானவைகளே. நான் விரும்பிய அளவு, குழந்தைகளுக்காக என் நேரத்தைச் செலவிட என்னால் முடியவில்லை. அவர்கள் விஷயத்தில் போதிய கவனம் செலுத்த என்னால் முடியாது போனதும், தவிர்க்கமுடியாத வேறு காரணங்களும், அவர்களுக்கு நான் அளிக்க விரும்பிய இலக்கியக் கல்வியை அளிக்க முடியாதபடி செய்துவிட்டன. இவ்விஷயத்தில் என்மீது என் குமாரர்கள் குறைகூறியிருக்கின்றனர். எம். ஏ. அல்லது பி. ஏ.படித்தவரையோ அல்லது மெட்ரிகுலேஷனாவது படித்தவர்களையோ அவர்கள் சந்திக்கும் போதெல்லாம், பள்ளிக்கூடப் படிப்பு இல்லாததன் கஷ்டத்தை அவர்கள் உணருவதாகத் தோன்றுகிறது.

அது எப்படியானாலும் என் அபிப்பிராயம் வேறு. எப்படியாவது அவர்களைப் பொதுப் பள்ளிக்கூடத்தில் பிடிவாதமாகப் படிக்கவைத்திருந்தேனாயின், அனுபவம் என்ற பள்ளிக்கூடத்தில் மாத்திரம் கிடைக்கக்கூடியதான, பெற்றோருடன் இருப்பதால் அடைவதான கல்வி, அவர்களுக்கு இல்லாது போயிருக்கும். அவர்களைப்பற்றி நான் இன்று கொஞ்சமும் கவலை இல்லாமல் இருக்கிறேன்; இப்படி இருக்கமுடியாமலும் போயிருக்கும். என்னைவிட்டுப்பிரிந்து, இங்கிலாந்திலோ, தென்னாப்பிரிக்காவிலோ அவர்கள் பெற்றிருக்கக்கூடிய இயற்கையல்லாத கல்வி, இன்று வாழ்க்கையில் அவர்கள் காட்டி வரும் எளிமையையும், சேவா உணர்ச்சியையும் அவர்களுக்குப் போதித்தே இராது. மேலும், அவர்களுடைய செயற்கை வாழ்க்கை முறை எனது பொது வேலைக்குப் பெரிய இடையூறாகவும் இருந்திருக்கும். ஆகையால், என் திருப்திக்கு ஏற்ற வகையிலோ, அவர்கள் திருப்தியடையும் வகையிலோ, அவர்களுக்கு இலக்கியக் கல்வியை அளிக்க என்னால் முடியாது போயிற்று. ஆனாலும், என்னுடைய சக்திக்கு எட்டிய மட்டும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய என் கடமையை நான் செய்யாமல் இருந்துவிடவில்லை என்று, என்னுடைய கடந்த ஆண்டுகளைத் திரும்ப எண்ணிப் பார்க்கும்போது நான் நிச்சயமாகக் கருதுகிறேன். பொதுப் பள்ளிக் கூடங்களுக்குக் குழந்தைகளை அனுப்பாது போனோமே என்று நான் வருந்தவே இல்லை. இன்று என் மூத்த மகனிடம் விரும்பத்தகாத குணங்களை நான் காண்கிறேன்.

கட்டுத் திட்டமும் ஒழுங்கும் அற்ற என் இளவயதின் எதிரொலியே அது என்று நான் எப்பொழுதும் உணருகிறேன். என் வாழ்நாளின் அப்பகுதி, அரைகுறையான அறிவும், சுகபோகப் பற்றும் நிரம்பியிருந்த காலம் என்று கருதுகிறேன். அந்த காலமும் என் மூத்த மகனுக்கு நன்றாகப் புத்தி தெரிந்த காலமும் ஒன்றாக இருந்தன. அது, நான் அனுபவம் இன்மையிலும், இன்ப நுகர்ச்சியிலும் திளைத்த காலம் என்று கருத இயற்கையாகவே அவன் மறுத்து விட்டான். இதற்கு நேர்மாறாக அதுவே என்னுடைய வாழ்க்கையின் மிக சிறந்த காலம் என்றும், பின்னால் எனக்கு ஏற்பட்ட மாறுதல்கள்,



அறிவுத்தெளிவு என்று தவறாகக் கூறப்படும் மதிமயக்கத்தினால் ஏற்பட்டவை என்றும் அவன் கருதிவிட்டான்.

அவன் அப்படியே எண்ணியிருக்கட்டும். என் வாழ்க்கையின் ஆரம்ப காலம், நான் புத்தித்தெளிவு பெற்றிருந்த காலம் என்றும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்ட பிந்திய காலமே மாயையும், அகந்தையும் நிறைந்த காலம் என்றும், அவன் ஏன் எண்ணக் கூடாது? அடிக்கடி நண்பர்கள் என்னைக் கீழ்வரும் பல கேள்விகளைக் கேட்டு மடக்கப் பார்த்திருக்கின்றனர். உங்கள் குழந்தைகளுக்குக் கலாசாலைப் படிப்பு அளித்திருந்தால் அதனால் என்ன தீமை விளைந்திருக்கும்? 'இவ்விதம் அவர்களுடையசிறகுகளைத் துண்டித்துவிடுவதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?' 'படித்துப் பட்டம் பெற்று, தங்களுக்கு விருப்பமான வாழ்க்கைத் துறைகளை அவர்கள் மேற் கொள்ளுவதற்கு நீங்கள் ஏன் குறுக்கே நின்றிருக்க வேண்டும்?'

இந்த விதமான கேள்விகளில் அதிக முக்கியத்துவம் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. எத்தனையோ மாணவர்களுடன் நான் பழகியிருக்கிறேன். கல்வியைக் குறித்து எனக்குள்ள கொள்கைகளை நானாகவோ, மற்றவர்களின் மூலமோ வேறு குழந்தைகளிடமும் அனுசரித்து, அதன் பலனையும் கவனித்திருக் கிறேன்.

என் புத்திரர்களின் வயதினரான மற்றும் பல இளைஞர்களை எனக்குத் தெரியும். மனிதனுக்கு மனிதன் ஒப்பிட்டுப் பார்த்தால், என் புதல்வர்களைவிட அவர்கள் எந்த விதத்தி லும்மேலானவர்கள் என்றோ, அவர்களிடமிருந்து என் புதல்வர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய எதுவும் இருப்பதாகவோ நான் எண்ணவில்லை.

ஆனால் என்னுடைய சோதனைகளின் முடிவான பலன், காலத்தின் கருப்பையில் இருக்கிறது. இந்த விஷயத்தை நான் இங்கே விவாதிப்பதற்கு முக்கியமான நோக்கம் ஒன்று உண்டு. நாகரிக வளர்ச்சியின் வரலாற்றை ஆராயும் ஒருவர், கட்டுப்பாட்டோடு கூடிய வீட்டுப் படிப்பிற்கும், பள்ளிக்கூடப் படிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தையும், பெற்றோர் கள் தங்களுடைய வாழ்க்கையில் செய்யும் மாறு தல்களுக்கு ஏற்ற வகையில் குழந்தைகளிடையே ஏற்படும் மாறுதல்களையும் ஓரளவு அறிந்து கொள்ளக் கூடும் அல்லவா? இந்த அத்தியாயத்தை எழுதுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு: சத்தியத்தைநாடும்ஒருவர், சத்தியத்தைக்கொண்டு, தாம் செய்யும் சோதனைகளில் எவ்வளவு தூரம் போக வேண்டியிருக்கிறது என்பதையும் சுதந்திரத்தை நாடுபவரிடமிருந்து அக்கண்டிப் பான சுதந்திர தேவி, என்ன என்ன தியாகங்களை எதிர் பார்க்கிறாள் என்பதையும் காட்டுவதே அக்காரணம் ஆகும்.

எனக்குச் சுயமரியாதை உணர்ச்சி இல்லாதிருந்திருக்குமானால், மற்றவர்களுக்குக் கிட்டாத கல்வி, என் குழந்தைகளுக்குக் கிடைப்பதைக் கொண்டு நான் திருப்தியடைந்து விடுபவனாக இருந்திருந்தால், அவர்களுக்கு நல்ல இலக்கியக் கல்வியை அளித்திருப்பேன். ஆனால்,சுதந்திரத்திலும் சுயமரியாதையிலும் அவர்கள் பெற்றிருக்கும் அனுபவப் படிப்பு, அப்போது அவர்களுக்கு கிடைத்திருக்காது. சுதந்திரம் அல்லது படிப்பு ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டிவரும்போது, படிப்பைவிடச் சுதந்திரமே ஆயிரம் மடங்கு மேலானது என்று யார்தான் கூறமாட்டார்கள்? இந்திய இளைஞர் களை, அவர்களுடைய அடிமைத் தனத்தின் கோட்டைகளில் இருந்து அதாவது அவர் களுடைய பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளி லும் இருந்து வெளியேறிவிடுமாறு

1920 இல் நான் அழைத்தேன். 'அடிமை விலங்குகளுடன் இலக்கியக் கல்வி கற்கப் போவதைவிட, சுதந்திரம் பெறுவதற்காக எழுத்து வாசனையே இல்லாமல் இருந்து, கல்லுடைத்து வாழ்வதே எவ்வளவோ மேல்' என்று அப்பொழுது அவர்களுக்குச் சொன்னேன். எந்த ஆதாரத்துடன் நான் இந்தப் புத்திமதியைக் கூறினேன் என்பதை இளைஞர்கள் இப்பொழுது கண்டு கொள்ளலாம்.

# அரிசித்தொண்டு அருளாளர்களுக்கு தயவான வேண்டுகோள்

ஆலய சேவாதாரிகள், அரிசித்தொண்டு அருளாளர்களைக் குறித்த நேரத்தில் சந்திக்க காலதாமதம் ஏற்படுவதினாலும், தங்களின் தயவான தொண்டு, குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்குக் கிடைக்க வேண்டிய காரணத்தினாலும், அருள்ஜோதி அன்ன ஆலயம் புதியதொரு வழிமுறையை வகுத்துள்ளது. அருளாளர்கள் தாங்கள் தயவுடன் அளிக்கும் அரிசித்தொண்டு மற்றும் கல்வித்தொண்டு காணிக்கையினைத் தங்களது வங்கியிலேயே (தற்போது இந்தியன் வங்கி அருளாளர்கள் மட்டும்) அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றும் அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை கணக்கிலேயே செலுத்திடலாம். அருளாளர்கள் தற்போது வழங்கி வரும் ரூ.100/– காணிக்கையினை ரூ.150/–ஆக (நூற்றிஐம்பதாக) உயர்த்தி வழங்கிடுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். **பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.**

From

To

**தொடர்புக்கு:**
**9003034056 / 25589575**

The Manager
Indian Bank
……………………………….. Branch
Chennai

Sir,

I am having Saving /Current Account with your Bank and the Account No. is ……………………………… I request you kindly to transfer a sum of Rs……………… (Rupees………………………………………………………only) to the following Account Holder on 5th of every month from May 2014 onwards.

| Details | Aruljothi Anna Alayam | Aruljothi Educational Trust |
|---|---|---|
| Account No.: | 403721163 | 403723477 |
| Bank: | Indian Bank | Indian Bank |
| Branch: | Jawahar Nagar | Jawahar Nagar |
| IFSC No.: | IDIB 000P132 | IDIB 000P132 |

தங்கள் இல்லத்திற்கு வரும் சேவாதாரியிடம் இப்படிவத்தினைப் பெற்றுக் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்து, தங்களது வங்கியின் மேலாளரிடம் சேர்ப்பித்து விட்டால் தங்களது காணிக்கை பிரதி மாதம் 5ஆம் தேதி அருள்ஜோதி அன்ன ஆலயம் / கல்வி அறக்கட்டளை வங்கி கணக்கில் சேர்ந்து விடும். பின்னர் இத்தகவலை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தெரிவித்து விடவேண்டும். இத்திட்டத்தில் அனைத்து அருளாளர்களும் பங்கு கொள்ள தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

***Email: annaalayam@gmail.com***

# ஆசை... துன்பத்தின் பாஷை!

மனித குலத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் என்ன காரணம் என்று பல்வேறு ஞானிகள் பல்வேறு காலத்தில், பலநூறு கோணத்தில் ஆராய்ந்தார்கள். ஆனால் என்ன ஆச்சர்யம்! எல்லோரும் ஒரே முடிவுக்குத்தான் வந்தார்கள். ''ஆசைப்பட பட ஆய்வரும் துன்பம்'' என்ற திருமூலர் திரு மந்திரத்தையே அவருக்கு முன்னும் பின்னும் வந்த ஞானிகள் பாட்டிலும் வசனத்திலும் பல்வேறு மொழியிலும் பகர்ந்து போயினர்.

துன்பத்துக்கு ஆசை காரணம். ஆசைக்கு எது காரணம்? மனசுதான் காரணம். அதனால் தான் காமன் என்னும் மன்மதன் ஆசைகளின் தெய்வம் மனஸிஜன் என்று அழைக்கப் படுகிறான். மனஸில் ஜனித்தவன் 'மனஸிஜன். அதுசரி... மனசில் ஆசை தோன்ற எது காரணம்! இது புரியாத புதிர். இந்த ஆசைதான் பிறப்பின் விதை ஜனன ரகசியம். பிறவியின் மூலம் என்ற பொருளில் 'அவா... பிறப்பீனும் வித்து'' என்கிறார் திருவள்ளுவர். இதையே இராமாயணம் தத்துவார்த்த மாகச் சொன்னது.

ஆசையே பிறப்பின் மூல காரணம் என்பதால் ஞானிகள் ஆசையை விட்டுவிட காடு மேடு சென்று கடுந்தவம் புரிகின்றனர்.

ஆசையை வழங்கும் மன் மதனை ஆராய்ந்தார் ஆதிசங் கரர். அவன் ஆயுதங்கள் பலவீன மானவை. கையில் வைத்திருக்கும் கரும்புவில் எவ்வளவு பலவீன மானது. அவன் வில்லின் நாணோ வரிசையாய் நிற்கும் வண்டுகள். அவை அறுந்து போகாமல் இருந்தால் தான் ஆச்சர்யம். தாழம்பூ உடைவாள். வெயில் பட்டால் வாடிவிடும். பஞ்ச பாணங்களும் ஐந்து மலர்கள்தான். அவை எவ்வளவு மென்மையானவை. இத்தகைய பலவீனமான ஆயுதங்கள் எவ்வளவு பலசாலிகளை வீழ்த்தி விட்டன தெரியுமா?

சரித்திரத்தையே மாற்றியமைக்கக் கூடிய சாதனை யாளர்கள் அற்புதங்கள் நிகழ்த்தக் கூடிய அரசியல் தலைவர்கள் முறிந்து போனதற்குக் காரணம் காமம்!

வெற்றிகளைக் குவித்த விளையாட்டு வீரர்களை வீழ்த்திய வில் கரும்புவில்! குத்துச்



சண்டையில் நடுவர்களைப் பாயிண்டுகள் எண்ண வைத்த வீரரை சிறைச் சாலையில் கம்பி எண்ண வைத்த நடுவரின் தீர்ப் புக்குக் காரணம் மன்மத லீலை.....

அதனால் தான் பகவான் இராமகிருஷ்ணர் தமது துறவுச் சீடர்களுக்குச் செய்த உபதேசத்தில் காமினி காஞ்சன ஜெயமே முக்யம்' என்று திரும்பத் திரும்ப உபதேசிக்கிறார். இல்லறத்தாரும் தமது ஆசைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் என்பது காந்திஜி கொள்கை. "திருமணம் மனித பலவீனத்திற்குக் கிட்டிய சலுகை'' என்று கூறுகிறார் காந்திஜி. இது நியாயமானது.

நமக்குள் ஆசை இருக்கலாம். நாம் ஆசைக்குள் சிக்கிவிடக் கூடாது. இதையே பகவான் இராமகிருஷ்ணர், "தண்ணீரில் படகு இருக்கலாம். ஆனால் படகில் தண்ணீர் இருக்கக் கூடாது'' என்று வற்புறுத்தினார். வாரியார் சுவாமிகளோ , "நாம் காரில் ஏறலாம்... கார் நம் மீது ஏறக் கூடாது'' என்றார். ஆசை நமக்குள் அடங்கி இருந்தால் குற்றம் இல்லை. ஆசைக்குள் நாம் அடங்கி இருந்தால் கதை முடிந்தது! அதனால்தான் அருணகிரிநாதர்

"பேராசை என்னும்பிணியில் பிணிபட்டு ஓரா வினையேன் உழலத் தகுமோ'' என்று பாடுகிறார்.

ஆசையின் கொடுமையே, அதை அடையும் வரை ஆர்வம் இருக்கும். அடைந்ததும் நிறைவு வராது. இன்னொன்றின் மீது ஆர்வம் ஊட்டி, எது கிடைக்க வில்லையோ அதற்காக ஏங்க வைக்கும்.

பஸ்ஸில் பயணம் செய்யக் காத்திருக்கிறோம். எல்லா பஸ்களும் கூட்டமாகப் போகின்றன. எதுவுமே நிற்க வில்லை . காலம் வீணாய்க் கரைகிறது. எந்தப் பஸ்ஸாவது நிற்காதா என்று ஏங்குகிறோம். ஒன்று நின்றதும் ஓடிச் சென்று ஏறிவிட்டோம். நமக்கு நிறைவு வந்துவிடுமா.... கொக்கு மாதிரிக் கழுத்தை வளைத்து நீட்டி உட்கார ஏதும் இடம் கிடைக்குமா என்று எட்டிப் பார்க்கிறோம். இவ்வளவு பேர் நின்று கொண்டு வருகிறார்களே..... அவர்கள் என்ன அறிவற்றவர்களா! இடமிருந்தால் நிற்பார்களா?

முன்னால் இடம் கிடைப்பதைவிடப் பின்னால் ஆறு பேர் அமரும் இடத்தில் வாய்ப்பு உண்டு என்று அறிவு

சொல்ல, அகலாமல் நின்று கடைசியில் இடமும் பிடித்துவிட்டோம். இப்போதாவது நிறைவு உண்டா? அதுதான் இல்லை . தூக்கித் தூக்கிப் போடும் குலுக்கலில் முன்னால் இடம் கிடைக்காதா என்று ஏங்கியபடி இருக் கிறோம். அப்படி ஓர் அதிர்ஷ்ட ம் அடித்ததும் ஜன்னல் ஓரத்து இருக்கை என்றால் சவுகரியமாக இருக்குமே என்று கவலைப்படுகிறோம். ஜன்னல் ஓரத்து இருக்கை கிடைத்ததும் நமக்குள் சாந்தம் வந்துவிடுமா? மழை பெய்யத் தொடங்கிச் சட்டையை நனைத்ததும் ஜன்னலை மூடக்கண்ணாடிக் கதவைத் தேடுகிறோம். அது காணாமல் போய் வருடங்கள் ஆகிவிட்டன. இந்த அவஸ்தைக்கு நிற்பதே மேல் என்று நெளிந்து கொண்டு எழுந்து நிற்கிறோம். எதிலும் நிறைவு கிடைக்காமல் தடுமாறு கிறோம். "பரபரக்க வேண்டாம் பலகாலும் சொன்னேன்'' என்று பாடினார் திருஞான சம்பந்தர். அதையும் நாம் பரபரப்பாகவே படித்து முடித்துவிட்டோம்.

மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையில் விலங்குகளுக்கு ஓராசை மட்டும்தான். பெண்ணாசை மட்டும்தான் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் பொது. அதிலும் செக்ஸ் என்பது விலங்குகளுக்கு வெறும் biological problem. மனிதனுக்கு மட்டும்தான் அது மனசையும் அறிவையும் சேர்த்துக் கெடுக்கிற பிரச்சினை யாக இருக்கிறது.

மனிதனுடைய மண்ணாசையும் ஆச்சர்யமானது. அபத்தமானதும்கூட. அமரர் கீரன் அவர்கள் அழகாக விளக்குவார்கள். 'கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் உனக்கு என்று ஒருவருக்குச் சொன்னால், 'கடல் யாருக்கு?' என்று கவலைப்பட ஆரம்பித்து விடுவார்கள்'' என்பார்.

குரங்குகளைப் பிடிப்பவர்கள் வாய் சிறுத்த பானைகளில் பொறிகடலை போட்டு வைப்பார்கள். கைகளை உள்ளே விட்ட குரங்குகள் நிறைய அள்ளிக் கொண்டு கையை வெளியே எடுக்க முயற்சி செய்யும். கை வெளியே வராது. கொஞ்சம் கடலையை உள்ளே போட்டாலும் கை வெளியே வந்துவிடும். ஆனால் போடாது. பானைகளில் கை சிக்கிக் கொண்டதால் மரம் ஏறமுடியாது மாட்டிக்கொள்ளும்.

துன்பங்களுக்கு ஆசையே காரணமாகிறது என்றாலும் விட்டொழிப்பதும் எளிதல்ல. இதற்காகத்தான் பெரியோர்கள், மௌனவிரதம், உண்ணாவிரதம், ஒருபோது என்றெல்லாம் ஏற்படுத்தினார்கள். படிப்படியாக இவற்றை இறையுணர்வுடன் அதிகரிக்கும் போது ஆசை கள் குறையும். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக மலரும்.

# வள்ளலார் காட்டும் வாழ்வியல்



தனிமனிதனுக்கான தேவைகள் எனப்படுவது உடம்பைப் பேணிக்காத்தல், மனம்போன போக்கில் வாழாமை அறநெறியில் பற்றுதல், அமைதியின் சாதனமாகிய அன்பும், தயவு கருணை நீதியும் பெறுதல், மனிதப் பண்பைப் பேணுதல், இன்பத்தில் அளவுமுறை காத்தல், புலனடக்கம் பெறுதல் ஆசைகளையும், அல்லல்களையும் பெருக்காத வாழ்வு தொண்டு செய்தல், உணவைக் கட்டுப்பாடுடன் உண்ணுதல் போன்றவை வள்ளல் பெருமானார் கூறும் தனிமனித வாழ்வியல் முறையாகும்.

சமுதாயத்திற்கான தேவைகளான தம்மைத் தாமே திருத்திக் கொள்ளத் தயங்கும் மக்கள் அமைதியின்மையைத் தூண்டும் ஆயுத வியாபாரம், இயற்கையை உணராமல் இயற்கை வளங்களைச் சீரழிக்கும் நிலையிலிருந்து மாற்றம அணு ஆயுதப் போர் பட்டினிச் சாவுகள் இவற்றில் இருந்து விடுதலை, ஆகியவை வள்ளலார் கூறும் அடிப்படையான ஒழுக்கத்தோடு கூடிய பண்பாட்டால் சமுதாயம், பக்குவப்படுதல் அப்பக்குவத்தால் மனிதனை மனிதன் மதிக்கும் நிலை உருவாதல்.

இதுபோன்ற பண்பட்ட நிலைகள் சமுதாயத்தின் எல்லாவகையான அவலங்களையும் களைய உதவும்.

இயற்கை வளங்களைக் காக்கும் சுற்றுசூழல் தேவைகளை இயற்கையின் தட்பவெட்பம், தூசி, புகை நச்சுக்காற்று, நோய்க்கிருமிகள் பரவுதல் போன்றவற்றில் இருந்து காப்புப்பெறுதல்.

இறையுணர்வு அடைதலுக்கான ஆன்மிகத் தேவையானது. அனைத்துப் பொருட்களாலும் இறைவனைக் கண்டு அவற்றைப் பேணும் உணர்வை அறிவுறுத்தல்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொணும் அறியோம் பராபரமே என்று தாயுமாணவர் கூறுகிறார். அதேபோல திருமந்திரத்தில் இன்பமும் துன்பமும் நிறைந்த மனித வாழ்க்கையை இன்பமாகவே வாழமுடியும் என்று உறுதி கூறுகின்றனர். இதணையோ நாம் வள்ளல் பெருமானாரும் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க, என்று கூறுகிறார். இதனை பற்றிய கதை சென்ற மாத இதழில் வாழ்க்கையும் வள்ளலாரும் என்ற கட்டுரையில் விவரமாக எழுதியுள்ளேன்.

பண்டைத் தமிழ்நெறியான சைவநெறியின் சிறப்பினை பல இடங்களில்காணமுடிகிறது. சிவனை முழுமுதற்கவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயம். உலகச் தோற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமாக இருப்பதே சிவபெருமான் என்பதே. அவனே சக்தியும் சிவனுமாகிறான். என்பன போன்றவை திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றன. இதனையே வள்ளல் பெருமானார்கள்

**உருவர் ஆகியும் அருவினர் ஆகியும்**
**உரு அருவினராயும் ஒருவரே உளார் கடவுள்**
**கண்டறிமினோ உலகுளீர் உணர்வின்றி இருவராம்**
**என்றும் மூவரேயாம் என்றும் இயலும் ஐவர்கள்**
**என்றும் எருவராய் உரைத்து உழல்வதென்**
**உடற்குஉயர் இரண்டு மூன்று ?????**

**–வள்ளலார்**

பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன் ஆகிய அருஉருவினராகியும், சதாசிவன் ஆகிய உருஅருவினராகியும் (கடவுள்) இறைவன் ஒருவரே உள்ளார். இதனை அறிந்து கொள்வீராக. மெய்யுணர்வின்றி இருவராம் என்றும், மூவராம் என்றும், தொழிலாற்றும் ஐவர்கள் என்றும் வீணராய் உரைத்து வருந்துவது ஏதற்காக? உடலுக்கு உயிர் இரண்டு என்றும் மூன்று என்றும் சொல்லலாகுமோ?

இவ்வாறாக கூறும் வள்ளல் பெருமானார் இறைவ் அருட்பெருஞ்ஜோதியானவன் என்றும் குறிப்பிடுகின்றார். இந்த அருட்பெருஞ்ஜோதியில் இருந்தேஅண்டம் யாவையும் இறைவன் உருவாக்கினார் என்று குறிப்பிடப்படுகிறது. அத்துடன் தற்போதைய விஞ்ஞானம் இதனை ஒப்புகொள்கிறது.

உலகத் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும்

அணுக்களே காரணம் அனு என்பது ஐம்பூதங்களான் கூட்டுச் சேர்க்கையாகும் அணுக்கு உயிராய் விளங்குவது சிவம் (அருட்பெருஞ் ஜோதி) அணுக்களின் எண்ணிக்கை *41,500* இவை *96* மெய்களால் அடங்குகின்றது. அணுவில் மூன்று முக்கிய அணுக்கள் உள்ளன என்பதை இன்றைய அறிவியலோடு ஒப்பிடும் வகையில் அன்றே திருமூலர் முதல் வள்ளலார் வரை கூறியிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.




வள்ளல் பெருமானார் போகநெறி வாயிலாக மெய்யுணர்வைப் பெற்று அன்பு, கருணை, தயவு. அருளைப்பெற்று முக்தி அடைவதையே விரிவாக கூறுகின்றார். யோக நெறியின் முடிவாக அன்பு நெறியைக் காட்டுகின்றது. இயற்கை உணர்வாகிய அன்பு, கருணை என்பனவை அத்துடன் அன்புடன் செய்யப்படும் அறச்செயல்கள் தவநிலை எய்தப் பயன்படும் யோகம் இந்த மூன்றும் இணைந்து மெய்யுணர்வு பெறும் வாழ்க்கை நெறியைத் வள்ளலார் உணர்ந்துகின்றார்.

சமுதாயத்தின் காணும் பலவகை துன்பங்களுக்கு தீர்வாக அமைவது இந்த மெய்யுணர்வு பெறுதல் என்கிற யோகநெறியே ஆகவே தான் வள்ளல் பெருமானார் தாம் பெற்ற நிலையை அனைவரும் அடையவேண்டும் என்று கூறுகிறார். தாம் பெற்ற இன்பம் பெறுக இங்கையகம் என்பது போல. மனிதன் மெய்யுணர்வு பெறுவதன் அவசியமாவது மனவளம் பெறுவதுடன் உயிர்வளம் பெறுவதே உடம்பை கருவியாக கொண்டு யோகசாதனை மூலம் முடித்த முடிவு ஆகிய இறைவன் அருட்பெருஞ்ஜோதியை அடையவதே.

அறியாமைதான் மக்களின் துன்பத்திற்கு காரணமாகிறது. இதை போக்குவதே இதனை கருதிய வள்ளலார். இறைவன் ஒருவனே அவன் அருட்பெருஞ்ஜோதியானவன். அத்துடன் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எல்லா உயிர்களும் இன்புற்று இருக்க நினைப்பது போன்ற உண்மை விளக்கம் மக்களிடம் கூறினார்.

சங்க இலக்கியத்துக்கு முன்பு தொடங்கி வரையறை செய்து தெளிவாக காணக்கூடிய வரலாறு பொதிந்த *5000* ஆண்டுகளாகத் தமிழகத்தில் சித்தர்கள் தத்துவம் நிலவி வருகின்றது. அவர்களிடையே ஒரே பண்போடு கூடிய தனித்தன்மை, ஒருமைப்பாடு மாறுபடாத கோட்பாடு போன்றவை வாழையாடி வாழை என்ற வள்ளலாரின் வாக்கிற்கு இணங்க காண முடிகிறது. அவை ஒன்றே குலம் ஒருவனே தேவன் அவன் அருட்பெருஞ்ஜோதி இறைவன் என்பதே.

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**சென்ற மாத தொடர்ச்சி...**

**நினைவவை பலவாய் நினைவன பலவாய் இனைவற**
**விளக்கிடும் என்தனிச் சித்தே 1230**

நினைக்கும் மன உணர்வுடைய உயிர்கள் பலவாகவும், அவற்றால் நினைக்கப்படும் நினைவுகள் (பொருள்கள்) பலவாகவும், அவை நினைவது கிடையாத போது ஏற்படும் வருத்தமற விளங்கச் செய்வது ஒப்பற்ற சித்துப் பொருளாகிய சிவம்.

**காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய் ஏட்சியின்**
**விளக்கிடும் என்தனிச் சித்தே 1232**

பொறிகள் காணும் முறைகள் பலவாகவம், காணப்படும் பொருள்கள் பலவாகவும், ஓர் எல்லையில் இருந்து பொருள்களை உண்மையாகக் கண்டு உணர்கின்றதும், உணர்த்துகின்றதுமாய் நின்று விளங்கச் செய்வது ஒப்பற்ற சித்தாகிய சிவம்.

**செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்**
**எய்வு அற விளக்கிடும் என்தனிச் சித்தே 1234**

உலகில் உயிர்கள் செய்யும் வினைகள் எண்ணற்றனவாகவும், அவற்றால் செய்யப்படும் வினைச் செயல்கள் மிகப்பலவாகவும் தளர்வின்றித் தோற்றுவித்து, அவற்றால் துன்பங்கள் நீங்கும்படிச் செய்து, நிலைத்த வாழ்வு பெறச் செய்வது ஒப்பற்ற சித்துப் பொருளாகிய சிவம்.

**அண்ட சராசரம் அனைத்தையும் பிறவையும்**
**எண்தர விளக்கும் என்தனிச் சித்தே 1236**

உலகங்களையும் அவற்றில் வாழும் அசையும் அசையாப் பொருள்களையும், பிறவற்றையும் அவை அகத் தெளிவுபெற்று, எண்ணியது நிறைவேறவும், அனுபவமுற்று நிலைத்த இன்பம் பெறவும், விளங்கச் செய்வது ஒப்பற்ற சித்தாகிய சிவம்.

**எல்லாம் வல்லசித்து எனமறை புகன்றிட**
**எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே 1238**

எல்லாம் வல்லதாகிய இயற்கை விளக்கமாய் விளங்கும் இறைவன் என, வேதங்கள் எடுத்துரைக்கும் முறையில் எல்லாவற்றையும் விளங்கச் செய்து, உயிர்கள் இன்பப் பேறு பெறச் செய்வது மேலான சித்துப் பொருளாகிய சிவம்.

## இயற்கை இன்பம்

**ஒன்று அதில் ஒன்று என்று உரைக்கவும் படாதாய்**
**என்றும் ஓர் படித்தாம் என்தனி இன்பே 1240**

இன்பம் தரும் பொருள்களுள் எதையாவது கொண்டு, அந்த ஒன்றைப் போன்றது என்று இறை இன்பத்தைக் கூறமுடியாததாய், எக்காலத்தும் ஒரு தன்மையதாகி விளங்குவது, சிறப்புடைய இன்பப் பொருளாக விளங்கும் சிவம்.

**இது அது என்னா இயல்உடை அதுவாய்**
**எதிர் அற நிறைந்த என்தனி இன்பே 1242**

பொறி புலன்களுக்கு அகப்படாது நிற்கும் பரம்பொருளாய், இதுவென்றும் அதுவென்றும் சுட்டி உணர முடியாத தன்மை உடையதாய், எங்கும் குறைவற நிறைந்ததுவாய் விளங்குவது ஒப்பில்லாத இன்பமான பரசிவம்.

**ஆக்குறும் அவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்**
**ஏக்கு அற நிறைந்த என்தனி இன்பே 1244**

உடலோடு கூடிச் செயல்படும் நனவு, கனவு,





முதலிய துன்பங்கள், துன்ப அனுபவங்கள் எல்லாவற்றையும் கடந்து. இறையும் உயிரும் இரண்டற்று, ஒன்றுபடும் மேல்நிலையில் குறைவின்றி நிறைந்து விளங்கச் செய்வது ஒப்பற்ற தனிப் பொருளாகிய சிவம்.

**அறிவுக்கு அறிவினில் அது அது அதுவாய்**
**எறிவற்று ஓங்கிய என்தனி இன்பே 1246**

அறிதலைச் செய்யும் ஆன்ம உணர்வினால், அறிவுக்கு அறிவான அருளினால் அறியப்படும் பொருள் வகை பலவற்றிலும், சார்ந்ததன் வண்ணமாய், உண்மை ஞான இன்பமாய், குறைவற பிரிவென்பதில்லாது நின்று ஓங்குவது ஒப்பற்ற தனிப்பொருளாகிய சிவம்.

**விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்து அவை**
**இடை இடை ஓங்கிய என்தனி இன்பே 1248**

பொறி புலன்களால் அறியப்படும் பொருள்கள் அனைத்துள்ளும், காரண காரிய நெறியில் மேன் மேலாகத்தோன்றி அவற்றிலும், அவற்றின் இடையிலும், கடவுளான்ம நிலையிலும், அதனைச் சூழ்ந்துள்ள உடம்பின் புற நிலைக்கும். இடையே தோன்றும் உணர்விலே இன்ப ஆற்றலாகவும் நிறைந்து நின்று ஓங்குவது மேலான பரசிவம்.

# வள்ளலார் பொன்மொழிகள்

* சினம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல் முதலியவைகளை அறவே நீக்க வேண்டும்.

* அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படை. உண்மையைச் சொல், அது உனது வார்த்தைகளைப் பாதுகாக்கும்.

* யாரிடத்தில் தயவு அதிகம் இருக்கிறதோ அவரிடத்தில் கடவுள் இருக்கிறார்.

* எனக்குச் சித்திகள் எல்லாம் தருகின்ற தெய்வமாக விளங்குவது சத்தியமே.

* எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் பாவித்து சம உரிமை வழங்குவோரின் மனதில்தான் இறைவன் வாழ்கிறான்.

* ஏதும் இல்லாத ஏழைகளுக்கு இரக்கப்பட்டு மனது உவந்து ஈவதே ஜீவகாருண்யம்.

* வாக்கு வேறு, மனம் வேறு, செய்கை வேறு என்கிற நிலையில் இறைவனை வழிபடாதீர்கள். மூன்றும் ஒன்றிய நிலையில் வழிபடுங்கள்.

# சகோதர... சகோதரிகளே...

## 3. குரு

நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்க விரும்பினால், 'ஏசு எங்கே பிறந்தார்? ஜெருசலேமிலா, பெத்லகேமிலா? அவர் தமது மலைப் பிரசங்கத்தை எந்தத் தேதியில் ஆற்றினார்?' என்றெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. மலைப் பிரசங்கத்தை நீங்கள் உணர வேண்டும், அதுதான் தேவை. அது என்று ஆற்றப்பட்டது என்பதைப்பற்றி இரண்டாயிரம் வார்த்தைகள் படிக்கத் தேவை யில்லை. இவை எல்லாம் பண்டிதர்களின் மனமகிழ்ச்சிக்காக! அது அவர்களிடம் இருந்துவிட்டுப் போகட்டும். நாம் அதற்கு ஒரு வாழ்த்துக் கூறிவிட்டு மாழ்பழங்களைச் சுவைப்போம்!

குருவிடம் இருக்க வேண்டிய இரண்டாம் தகுதி, அவர் பாவமற்றவராக இருக்க வேண்டும் என்பதாகும். இங்கிலாந்தில் என் நண்பர் ஒருவர் ஒருமுறை என்னிடம், 'நாம் ஆசிரியரின் நடத்தையைக் கவனிக்க வேண்டுமா? அல்லது அவர் சொல்வதை மட்டும் ஆராய்ந்து அதை எடுத்துக்கொள்ள வேண்டுமா?' என்று கேட்டார். அப்படிக் கூடாது. எனக்கு ஒருவர் இயற்பியலையோ வேதியியலையோ அல்லது வேறு அறிவியலையோ கற்பிக்க விரும்பினால், அவருடைய ஒழுக்கம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அவரால் இயற்பியலையோ, வேறு அறிவியலையோ கற்பிக்க முடியும். ஏனெனில் அறிவியலுக்குத் தேவையான அறிவு, மூளையைப் பற்றியது; மூளையின் நுட்பத்தைப் பற்றியது. சிறிதுகூட ஆன்ம வளர்ச்சி இல்லாமலும்கூட மிகச் சக்தி வாய்ந்த அறிவாற்றல் ஒருவனிடம் இருக்க முடியும்.

ஆனால் ஆன்மீக விஷயத்தில், தூய்மையற்ற ஒருவரிடம் ஆன்ம ஒளி இருப்பது ஆரம்பத்திலிருந்து முடிவுவரை முடி யாத காரியம். அவர் எதைக் கற்பிக்க முடியும்? அவருக்கே ஒன்றும் தெரியாது. பரிசுத்தம்தான் ஆன்மீக உண்மை. இதயத் தூய்மை உடையவர்கள் பேறு பெற்றவர்கள்.' அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள். ஆன்மீகம் என்பதன் சாரம் முழுவதும் அந்த ஒரு வாக்கியத்தில் அடங்கியுள்ளது. இதை நீங்கள் அறிந்து கொண்டால், முன்பு சொல்லப்பட்ட எல்லாவற்றையும் அறிந்தவர் ஆவீர்கள்; இனி சொல்லப்போவது அத்தனையும் அறிந்தவர் ஆவீர்கள். நீங்கள் வேறு எங்கும் தேட வேண்டாம். அந்த ஒரு வாக்கியத்தில் உங்களுக்குத் தேவையான அத்தனையும் இருக்கிறது. மற்ற எல்லா சாஸ்திரங்களும் மறைந்து போனாலும் அந்த ஒரு வாக்கியமே உலகத்தைக் காப்பாற்றிவிட முடியும்.

உள்ளம் தூய்மை பெறாமல் இறைக்காட்சியோ, எல்லாம் கடந்த உண்மையின் காட்சியோ கிடைக்காது. அதனால்தான் குருவிடம் தூய்மை கட்டாயமாக இருக்க வேண்டும். முதலில் அவர் எத்தகையவர் என்று பார்க்க வேண்டும். பிறகுதான் அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். சாதாரண ஆசிரியர்களின் விஷயத்தில் அப்படியல்ல. அங்கு, அவர்கள் எத்தகையவர்கள் என்பதைவிட அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதற்கே நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

ஆன்மீகத்தைப் போதிப்பவரான குரு விஷயத்தில், அவர் எப்படிப்பட்டவர், தூயவரா என்பதைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். அவர் தூயவராக இருந்தால் மட்டுமே அவரது வார்த்தைகளுக்கு மதிப்பு ஏற்படும். ஆன்மீக ஆற்றலை வழங்கு பவர் அவர். அவரிடம் ஆன்மீக சக்தி இல்லாவிட்டால் அவர் எதை வழங்குவார்? உதாரணமாக, இங்கே இருக்கின்ற வெப்ப அடுப்பில் வெப்பம் இருந்தால்தான் அது வெப்ப அலைகளை வெளியிட முடியும்; இல்லாவிட்டால் முடியாது. அதேபோல் குருவின் சிந்தனை அதிர்வுகள் தான் சீடனின் மனத்திற்குப் பாய்ச்சப்படுகின்றன. அவை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு இடம்



மாறுகின்றனவே தவிர, நமது அறிவுச் சக்திகளைத் தூண்டுவதுடன் மட்டும் நின்றுவிடுபவை அல்ல. உண்மையானதும், உணரக்கூடியதுமான ஏதோ ஒன்று குருவிடமிருந்து சீடனை அடைய வேண்டும். ஆகவே முக்கியமான நிபந்தனை, குரு உண்மையானவராக, தூயவராக இருக்க வேண்டும் என்பதுதான்.

மூன்றாவது தகுதி அவரது நோக்கம். ஏதாவது ஓர் உள் நோக்கத்தோடு, அதாவது பெயருக்கும் புகழுக்குமாக அவர் போதிக்கிறாரா அல்லது அன்பிற்காக, உங்கள் மீது கொண் டுள்ள உண்மையான அன்பிற்காக அவர் போதிக்கிறாரா என்று கவனிக்க வேண்டும். குருவிடமிருந்து சீடனுக்கு ஆன்மீக சக்திகள் அனுப்பப்படும்போது அவற்றை அன்பின் மூலமாகத் தான் அனுப்ப இயலும். வேறு எதன்மூலமாகவும் அனுப்ப முடியாது. ஏதோ லாபம், புகழ் என்று எந்த உள்நோக்கத்திற் காகச் செய்தாலும், அனுப்பப்படும் சாதனத்தை அது உடனே அழித்துவிடும். ஆகவே எல்லாம் அன்பின் மூல மாகத்தான் செய்யப்பட வேண்டும்.

கடவுளை அறிந்தவர் மட்டுமே குருவாக இருக்க முடியும். குருவிடம் இந்தத் தகுதிகள் இருந்தால் உங்களுக்கு ஆபத் தில்லை; இல்லாவிட்டால் அவரிடம் கற்பது ஆபத்தானது. நல்லதை அவரால் கொடுக்க முடியாவிட்டால், சிலவேளை களில் அவரிடமிருந்து கெட்டது கிடைக்கும் ஆபத்துகூட இருக்கிறது. இந்த விஷயத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். யாரை வேண்டுமானாலும் குருவாக ஏற்றுக் கொள்ள இயலாது என்பது இதிலிருந்து தெரிகிறது.

'ஓடைகள் போதனை செய்கின்றன, கற்கள் போதனை செய்கின்றன'1 என்றெல்லாம் சொல்வது கவிதைநயத்துடன் விளங்கலாம். ஆனால் தன்னிடம் இம்மியளவாவது உண்மை இல்லாதவன் போதனை செய்ய முடியாது. ஓடைகள் யாருக்குப் போதிக்கின்றன? யாருடைய வாழ்க்கைத் தாமரை உண்மை யான குருவிடமிருந்து பெற்ற ஒளியால் மலர்ந்து விட்டதோ, அவருக்குத்தான் அவை போதனை செய்ய முடியும். இதயம் மலர்ந்துவிட்டால் ஓடைகளிலிருந்தும் போதனை பெறலாம்; கற்களிலிருந்தும் போதனை பெறலாம். அவற்றிலிருந்து ஆன் மீக போதனையும் பெறலாம். ஆனால் மலராத இதயம் அங்கே ஓடைகளையும், உருள்கின்ற கற்களையும்தான் பார்க்கும்.

பார்வையற்றவன் பொருட்காட்சி சாலைக்குப் போகலாம். அவனுக்கு அதனால் ஒரு பயனும் இல்லை . முதலில் அவனது கண்கள் திறக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் அவன் அங்குள்ளவற்றைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியும். ஆன்மீகத்தைப் பொறுத்தவரை கண்ணைத் திறப்பவர் குருவே. குரு விஷயத்தில் நம்முடைய உறவு, மூதாதையர்சந்ததி என்கிற உறவுதான். குரு ஆன்மீக மூதாதையர், சீடன் ஆன்மீக சந்ததி. விடுதலை, சுதந்திரம் என்றெல்லாம் பேசுவது சரி; ஆனால் அடக்கம், பணிவு, மரியாதை, நம்பிக்கை இவை இல்லாமல் ஆன்மீகம் இல்லை. குருவுக்கும் சீடனுக்கும் இடையே இந்த உறவு இருக்கின்ற இடத்தில்தான் ஆன்மீகச் செம்மல்கள் மலர்கிறார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டிய உண்மை. இந்தப் பண்புகளைத் தூக்கியெறிந்து விட்டவர்களுக்கு ஆன்மீகம் என்பது வெறும் பொழுதுபோக்கே.

குருவுக்கும் சீடனுக்கும் இடையே இத்தகைய உறவு இல் லாத நாடுகளிலும் சமுதாயங்களிலும், ஆன்மீகம் என்பது கிட்டத்தட்டப் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே இருக் கிறது. இத்தகைய உணர்ச்சி இல்லாவிட்டால் ஆன்மீகம் வராது. முதலாவதாக, சக்தியைப் பாய்ச்சுவதற்கான குரு யாரும் இல்லை. இரண்டாவதாக, எல்லோரும் சுதந்திரமாக இருப்பதால் யாருக்குப் பாய்ச்சுவது? யாரிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள முடியும்? அப்படியே அவர்கள் கற்றுக் கொள்ள முன்வந்தாலும் அறிவை விலைக்கு வாங்கவே வரு கிறார்கள். 'ஒரு டாலர் பெறுமானமுள்ள ஆன்மீகம் கொடுங்கள்' என்று கேட்கிறார்கள். 'இதற்கு ஒரு டாலர் செலவிடக் கூடாதா?' என்று நினைக்கிறார்கள். இவ்வாறு ஆன்மீகத்தை அடைய முடியாது.

ஒரு குருவினால் பாய்ச்சப்பட்டு சீடனுள் புகும் அறி வொளியை விட உயர்ந்ததும், புனிதமானதுமான வேறு ஒன்று இருக்க முடியாது. ஒருவன் பூரண யோகியாகும்போது அது தானாகவே வந்து சேரும். அதை நூல்களிலிருந்து பெற முடியாது. உலகின் நான்கு மூலைகளுக்கும் சென்று உங்கள் தலையை முட்டிக்கொள்ளுங்கள். இமய மலைக்கோ, ஆல்ப்ஸ் மலைக்கோ, காகசஸ் மலைக்கோ, கோபி பாலைவனத்திற்கோ, சஹாரா பாலைவனத்திற்கோ, அல்லது கடலின் அடியாழத் திற்கோ சென்று தேடுங்கள். ஒரு குருவைக் கண்டுபிடிக்கும் வரையில் உங்களுக்கு அது கிடைக்காது. குருவைக் கண்டுபிடி யுங்கள், மகனின் நிலையிலிருந்து அவருக்குச் சேவை செய்யுங் கள்; அவருடைய ஆதிக்கம் உள்ளே செல்ல உங்கள் இதயத்தைத் திறவுங்கள்; அவரிடம் கடவுள் வெளிப்படுவதைக் காணுங்கள்.









## தைபூச


















# கழ்வுகள்




தூய்மை
உண்மை
ஒழுக்கம்
சுத்த
சன்மார்க்கம்
அறிவே
தெய்வம்
நல் எண்ணம்
நற் சொல்
நற் செயல்
அன்பு
அமைதி
ஆரோக்கியம்
ஜீவ காருண்யம்
அறநெறி

# தைபூச நிகழ்வுகள்

தயவு, கருணை, அன்பு, அருள், நிறைந்த நம்மவர்களுக்கு வந்தனம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அருளினாலும், வள்ளல் பெருமானாரின் அருளினாலும், சதிஷ்ராஜ் ஐயா அவர்களில் ஆற்றல், வழிகாட்டுதலினாலும் சீரும் சிறப்பாக நடைபெற்றது.

நம் பத்திரிக்கையில் கூறியது போல் 10 ஆயிரம் ஆத்மாக்களுக்கு பிரசாதம் தயாரிக்கப்பட்டு அளிக்கப்பட்டது. இதற்கு அன்ன ஆலயத்தின் தூண்களாக உள்ளவர்கள் அனைவரும் நிறைவான செல்வங்களையும் தயவு எண்ணங்களையும் ஆற்றல்களையும், கருணை சிந்தனையையும் மனமுவந்து வாரி வழங்கினர்.

7.02.2020 வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் விண்ணப்பிக்கப்பட்டு சமையல் பணி தொடங்கப்பட்டது. உணவுகள் பட்டியல்படி சம்பார்சாதம், சர்க்கரை பொங்கல் தயார் செய்யப்பட்டது. பிறகு காலை உணவாக அன்ன ஆலயத்தில் பரிமாறுவதற்கு 1500 பேருக்கு இட்லி, சாம்பார், சட்னி, கிச்சடி, பொங்கல் தயார் செய்யப்பட்டது. பிறகு கொடியேற்றம் நிறைவுற்று. அருள்ஜோதி அன்ன ரதத்தில் அருள் பிரசாதமானது இல்லங்களுக்கு கொடுத்து அனுப்பப்பட்டது.

அன்ன கூடத்தில் அனைவரும் ஈடுபாடுடன் சமைத்தனர். மதிய உணவு வழங்கிய இல்லங்களில் விவரம்:

ஆர்.கே.சுந்தர் –மே.தாம்பரம்
கோபி –பழைய பெருங்களத்தூர்
ராமமூர்த்தி – சூளைமேடு
பி.சு.தனபாலன் கிருஷ்ணபிரியா–கோடம்பாக்கம்
எம்.பாலாஜி உலகநாயகி– மே.மாம்பலம்
கீதா சுந்தர் –சூளைமேடு
எஸ்.ராஜேந்திரன்–போரூ
ஜி.என்.வத்சலா –கோடம்பாக்கம்
செல்வவிநாயகர் ஆலயம்–பெரம்பூர்
வெற்றி விநாயகர் –சாஸ்திரிநகர்
பீலிகான் முனீஸ்வரர் –வியாசர்பாடி
உதயகுமார் –வியாசர்பாடி
பி.செல்வராஜ் –டி.வி.கே.நகர்
வள்ளலார் ஆலயம் –பேசின்பாலம்
சாய்பாபா ஆலயம் –பெரம்பூர்
விநாயகர் ஆலயம் –கொடுங்கையூர்
ராமலிங்கம் சரஸ்வதி –திருவொற்றியூர்
ஹரிஹரன் டெய்லர் –மணிலிமாத்தூர்
முதியோர் இல்லம் –வியாசர்பாடி
ரேனுகா தேவியம்மன் –கக்கன்ஜி காலனி
விநாயகர் ஆலயம் –வியாசர்பாடி
இரா.தூயோன் –மாதவரம்
விக்னேஸ்வரன் பவித்ரா –ஆர்.ஏ.புரம்
எம்.ரவி. –மயலை
விஜயகுமார் –பெசன்ட்நகர்
ராமச்சந்திரன் ஜெயஸ்ரீ –அடையாறு
ரவிக்குமார் ஸ்ரீதேவி –கோட்டூர்புரம்
அமுதா வனஜா –தேனாம்பேட்டை
நித்தின் பிரசாத் –ஆர்.ஏ.புரம்
சம்பந்தம் –நுங்கம்பாக்கம்
சிவாவிஷ்ணு ஆலயம் –பெரியார்நகர்
வேலாயுதம் –லட்சுமிபுரம்
அங்காளபரமேஸ்வரி –வில்லிவாக்கம்
விநாயகர் ஆலயம் –கொளத்தூர்
மாமுருகன் ஆலயம் –மதுரவாயல்
முதியோர் இல்லம் –மதுரவாயல்
முதியோர் இல்லம் –சீட்டி தோட்டம்
செல்லியம்மன் ஆலயம் –கதிர்வேடு

## பெரவள்ளூர் சன்மார்க்கம் சங்கம்

சரஸ்வதி முத்துசாமி –வேளச்சேரி
ஆ.ப.அனந்தராமன் –ஆலந்தூர்
வள்ளலார் ஆலயம் –தரமணி
செல்வி. ரூபினி –நங்க நல்லூர்
ஆறுமுகம் –சர்மாநகர்
தத்பத அடிகளார் சபை –ரெட்ஹில்ஸ்
வள்ளலார் அன்னதான சமாஜம்–டி.வி.கே.நகர்
வள்ளலார் சபை –டி.வி.கே.நகர் மார்க்கெட்
தம்புசாமி தெரு –கீழ்ப்பாக்கம்
விநாயகர் ஆலயம் –சௌகார்பேட்டை
சரவணன் ஹேமாவதி –பட்டாபிராம்
கிருஷ்ணவேனி –அம்பத்தூர்
நித்யானந்தம் –கொரட்டூர்

கோகில கிருஷ்ணன் –அயப்பாக்கம்
விஜயா –முகப்பேர் கிழக்கு
நியூடெக் –அத்திபட்டு
வேம்புலியம்மன் ஆலயம் –கொட்டிவாக்கம்
சங்கர விநாயகர் ஆலயம்–கொட்டிவாக்கம்
குணசேகர் –கொட்டிவாக்கம்
வாசுகிகுணசேகரன் –பாலவாக்கம்
ஜானகி ராமன் –துரைப்பாக்கம்
கே.ஏ.பாண்டியன் –துரைப்பாக்கம்
வள்ளலார் அன்னதான சமாஜம்–டி.வி.கே.நகர்
ஆஞ்சநேயர் ஆலயம் –பட்டாளம்
மகாவிர் –பெரியமேடு
முனுசாமி –புளியந்தோப்பு
வைத்தீஸ்வரன் ஆலயம் –வீனஸ்
தர்மராஜா கோயில் –கீழ்ப்பாக்கம்
சுரேஷ் –புளியந்தோப்பு
சீனிவாச பெருமாள் –புரசை
ராமலிங்கசுவாமிகள் ஆலயம்–கிண்டி
ஜாகிராமன் –விருகம்பாக்கம்
ராமமூர்த்தி கீதா –கே.கே.நகர்
ராமமூர்த்தி –ஈக்காட்டு தாங்கல்
ராஜன் –குரோம்பேட்டை
J1 – கோயம்பேடு
H 85 , K7 – கோயம்பேடு
J97 – கோயம்பேடு
G100 – கோயம்பேடு
G102 – கோயம்பேடு
E113 – கோயம்பேடு
K105 – கோயம்பேடு
B104 – கோயம்பேடு
J114 – கோயம்பேடு
F36 – கோயம்பேடு
A41 – கோயம்பேடு
சரவணன் –கோயம்பேடு

மிகவும் வருத்தக்க விஷயம் உணவு மூன்று இல்லங்களுக்கு அனுப்புவதாக கூறினோம். அவர்களுக்கு அனுப்ப முடியவில்லை. அதற்காக மிகவும் வருந்துகின்றோம்.

**உணவு அனுப்ப முடியாத இல்லங்களின் விவரம்**

ராஜகுமாரி –அண்ணாநகர்
சந்திரமோகன் –மேத்தாநகர்
மாணிக்கவேல் –கோயம்பேடு

இரவு உணவு அற்புதமாக தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் அளிக்கப்பட்டது. 1200 ஆத்மாக்கள் பசி ஆற்றிவிக்கப்பட்டதுபெருமானார் அருளினால் நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் 5 பேரையும் ஜோதி தரிசனமும் சிறப்பாக நடைபெற்றது.

காலை சாந்தாஅம்மா அவர்களின் அகவல் பாராயணம், தயவு ஐயா அவர்களின் சொற்பொழிவும். நமது 60க்கும் மேற்பட்ட அருளார்களுக்கு வாழும் வள்ளல்கள், அருள்ஜோதி அன்ன ஆலய ஆணி வேர்களுக்கு வள்ளல் பெருமானாரின் அருட்பாடல்களை, சிவநேச வெண்பா, மகாதேவமாலை, குருவருண்முறையீடு பாடல்கள் சி.டி.வெளியிடப்பட்டு அதனை உலகதமிழ் ஆராய்ச்சி நிறுவனம் திருமூலர் ஆய்வு இருக்கை முனைவர் திருமதி மஹாலஷ்மி அம்மா அவர்கள் சி.டி.பெற்றுக் கொண்டனர். நமது உமாபதி ஐயா அவர்கள் ஆங்கிலத்தில் அகவல் பாராயணத்திற்கு விளக்கம் எழுதி உள்ளார்கள்.

உலகம் முழுவதும் அகவல் பாராயணம் ஓங்கி வளர வேண்டும் என்று பெருமுயற்ச்சி எடுத்து எழுதி உள்ளார்கள். அவர் வெளியிட்ட அகவல் விளக்க ஆங்கில புத்தகத்தை முனைவர் அருணா சிவகாமி மேனாள்துணைவேந்தர் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள் பெற்றுக்கொண்டனர்.

நமது மழலை செல்வங்களில் பட்டிமன்றம், பரதநாட்டியம், வள்ளலார் வாழ்வியல் நாடகம் யோகா போன்றவை வெகுசிறப்பாக நடைபெற்றது. அனைவரும் கண்டும், கேட்டும் பெருமானாரின் அருள் நிறைந்து உளமகிழ்ந்தார். எல்லோருக்கும் பத்திரிக்கையை கொண்டு சென்றவர்களுக்கும், சிறப்பாக சமைத்தவர்கள், பரிமாறியவர்கள் தொண்டு செய்து பொருட்களை வண்டியில் ஏற்றிய கல்லூரி மாணவர்கள் அலுவலக பணி புரிந்தவர்கள் நிகழ்ச்சியில் செயல் படுத்தியவர்கள், வந்து கண்டு நிறைவுற்றவர்கள் தர்மம் மளிகையாகவும், காய்கறியாகவும், பொருளாகவும் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் பெருமானாரின் பரிபூரண அருள் கோடிகோடியாக வந்து கூவியட்டும் நன்றி வந்தனம்! வந்தனம்!

**பிறருடைய பசியைப் போக்குவதோடு மட்டும் ஒருவனுடைய ஒழுக்கமும் கடமையும் முடிந்துவிடாது. பிறர்க்கு ஏற்படும் துன்பங்களைக்களையவும் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்**









# தைபூச நிகழ்வுகள்











## தொண்டு செய்பவர்களின் அனுபவங்கள்

திருமதி கலாவதி 81/110 பெருமாள் கோயில் தெரு, பெரியதோப்பு, சென்னை மணலியில் வசித்து வரும் இவர்கள் குடும்பம் பல வருடமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொண்டுகள் சிறப்பாக செய்துவருகின்றனர். மேலும் பலரையும் தொண்டு செய்வதற்கு ஈடுபடுத்தியுள்ளனர். இவர்கள் தொண்டு செய்வதினால் ஆரோக்கியமாக இருப்பதாக நிறைவடைகின்றனர். மேலும் இவர்களின் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் ஆசீர்வதிப்பார் இவர்களும் இவர்களின் தொண்டும்

வாழ்க! வாழ்க!! வளர்க!!!

வாழ்க வளமுடன்! மகிழ்ந்து அருள் துணையால் வாழ்க!

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.

## சன்மார்க்க திருமண மாலை

உலகின் மாபெரும் கடவுள் கொள்கையான வள்ளலார் பெருமானாரின் சுத்த சன்மார்க்கத்தை கடைப்பிடிப்பவர்களின் இல்ல திருமண வரன்கள் வரவேற்கப்படுகிறது. அவர்களின் முழு விவரம் அருள்ஜோதி மாத இதழில் பிரசுரிக்கப்படும்.

(குறிப்பு: புலால் மறுத்தசன்மார்க்க அன்பர்களுக்கு மட்டுமே)




# வடலூர் அருட்பயணம்

அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி! ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம்

4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்ளபவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.800 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி ஆலயத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: 9003034056

குறிப்பு: அடுத்த பயணம்: 06.03.2020

திரு.கணேசன் அவர்கள் வடலூர் அருட்பயணத்தில் மாதம் மாதம் தவறாமல் வருவது வழக்கம். இவர் வடலூர் அருட்பயணத்தால் உடல்நலம் ஆரோக்கியமாக இருப்பதாகவும் அவர்களது குடும்பம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாக இருப்பதாகவும் கூறினார்கள். அவர்களின் இந்த மகிழ்ச்சிக்கு காரணம் வடலூர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்று கூறுகிறார். மேலும் இவர்களின் குடும்பமும், மகிழ்ந்து அருள்துணையால் வாழ்க வாழ்க வாழ்க...

அந்தத் தெருவில் ஏதோ ஒரு சண்டை நடந்து கொண்டிருந்தது. கூச்சல் சிறுகச் சிறுகத் தீவிரம் அடைந்தபடி இருந்தது. இதே நிலை நீடித்தால் இன்னும் சற்று நேரத்தில் அங்கே கலவரம் வெடிக்கும் அபாயம்! சண்டையில் ஈடுபட்ட ஒருவருடைய கவனம் திடீரென வேறு ஒரு திசையில் ஈர்க்கப்பட்டது.

யாரோ ஒருவர் மின் கம்பத்தில் தனது இரண்டு காதுகளையும் மாற்றி மாற்றி வைத்து கேட்டுக் கொண்டிருந்தார். அவர் அப்படி எதைக் கேட்க முயல்கிறார் என்பது எவருக்கும் புரியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக அவரைச் சுற்றியும் ஒரு கும்பல் கூட ஆரம்பித்துவிட்டது. அந்த நபரோ யாரையும் கண்டுகொள்ளாமல், மின்கம்பத்தில் காதுகளை மாற்றி மாற்றி வைத்து எதையோ கேட்ப திலேயே தீவிரமாக இருந்தார். அவரை வேடிக்கை பார்த்த வேறொருவர் அவருக் குப் பக்கத்தில் சென்று அவரைப் போலவே மின்கம்பத்தில் காது களை மாற்றி மாற்றி வைத்துக் கேட்டுப் பார்த்தார்.

எதுவுமே கேட்கவில்லை. "மின்கம்பத்தில் அப்படி என்னதான் கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்? எனக்கு எதுவுமே கேட்கவில்லையே?" என்று கேட்டார் அவர். கம்பத்தில் காதுவைத்துக் கேட்டவர் இவரை விநோதமாகப் பார்த்துவிட்டு சொன்னார்.. "ஒரு மணி நேரமாக முயற்சிக்கும் எனக்கே எதுவும் கேட்கவில்லை.

இப்போதுதான் வந்த உங்களுக்கு எப்படி கேட்கும்?" இப்போது இந்த இருவரையும் வேடிக்கை பார்க்க கும்பல் பெருக ஆரம்பித்துவிட்டது. கைகலப்பில் முடியவேண்டிய அந்தத் தெருச்சண்டை, வாய்ச்சண்டையோடு முடிவுக்கு வந்துவிட்டது. ஆன்மாவை நோக்கிய பயணமும் இப்படித்தான் உள்ளது.

# நாவின் சுவையும்... ஆன்மா வின் அம்சமும்!

ஆன்மாவை அறிய முடியாவிட்டாலும்கூட, அறிவதற்கான முயற்சி நன்மையிலேயே முடிகிறது. ஆன்மா என்று எதுவுமே கிடையாதா? 'ஆன்மாவைக் கொண்டு ஆன்மாவை அறிக' என்று கூறி சாஸ்திரங்கள் நம்மை ஏமாற்றுகின்றனவா? ஆன்மாதான் உண்மையான ஒன்று எனக் கூறிவிட்டு, அதை அறிய முடியாது என்றும் கூறிவிடுகிறது. ஏன் இந்தக் குளறுபடி? ஆன்மா என்றால் என்ன? ஆன்மாவை உணர்வு நிலை, சித் அம்சம், பிரக்ஞை, தன்னறிவுள்ள நிலை, இருப்பு நிலை, Awareness என்று பல பெயர்களிட்டு குறிப்பிடுகின்றன. ஆன்மாதான் ஆதார உணர்வு நிலை Awareness என அழைக்கப்படுகிறது. அதிலிருந்து வெளிப்படுபவை அனைத்தும் 'உணர்ச்சி நிலை' அல்லது Consciousness என்று அழைக்கப்படுகின்றன. நமது நாவில் இனிப்புப்



பதார்த்தம் ஒன்றைப் போடுகிறோம். நமது நாக்கே இனிப்பாக மாறி இனிப்பைக் காட்டுகிறது. நாவில் கசப்பான மருந்து ஒன்றைக் கொட்டுகிறோம். நமது நாக்கே கசப்பாக மாறிக் கசப்பைக் காட்டுகிறது.



இங்கே என்ன நடக்கிறது? நமது நாக்கு ஓர் அறியும் தன்மையுடன்.. உணரும் தன்மையுடன் இருக்கிறது. அந்தத் தன்மைதான் இனிப்பாகவும் மாறு கிறது. கசப் பாகவும் மாறுகிறது. இனிப் பாக மாறிய உணரும் தன்மையை நாம் அறிகிறோம். கசப்பாக மாறிய உணரும் தன்மையையும் நாம் அறிகிறோம். எந்த மாற்றத்தையும் அடையாத உணரும் தன்மையை நம்மால் அறியமுடியாது. நாக்கினுடைய உணரும் தன்மை எப்படி இருக்கும் என்று எவருக்குமே தெரியாது. ஆனால், அதுதான் உண்மையில் இருக்கிறது.

அதுதான் எல்லாச் சுவைகளுக்கும் ஆதாரமாக இருக்கிறது. சுவையான உணவு எதையும் நாவில் போடாதிருக்கும்போது, நமது நாக்கு என்ன சுவையோடு இருக்கும்? அது எந்தச் சுவையையும் காட்டாமல், இருப்பது தெரியாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அந்த அடிப்படை இருப்புணர்வுதான் பிரக்ஞை Awareness ஆகும். அதுதான் சித்அம்சம். அதுதான் ஆன்மாவின் அம்சம். அதனால்தான் ஆன்மாவைக் கொண்டு ஆன்மாவை அறிக' என்கின்றன சாஸ்திரங்கள்!

ஆன்மா என்பதற்கு ஏன் முக்கியத்துவம் தர நேர்ந்தது? 'ஆத்மாதான் உண்மையானது, நித்தியமானது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் அனாத்மா பொய்யானது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்..' என்கின்றன சாஸ்திரங்கள்.

ஆத்மா சரி.. அதென்ன அனாத்மா? ஆத்மா அல்லாதது அனைத்தும் அனாத்மா என்று கூறப்படுகிறது. உயிரற்ற ஜடப்பொருட்களான கல், மண், கடல், மலை போன்றவற்றை அனாத்மா என்று கூறலாமா? சாஸ்திரங்கள் அப்படிக் கூறவில்லை. நீங்கள் ஓர் இருட்டறையில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

வெளிச்சம் இல்லாததால் அறையிலிருக்கும் எந்தப் பொருளும் உங்களுக்குப் புலப்படவில்லை . ஒரு மெழுகுவர்த்தியைக் கொண்டு வருகிறோம். மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் அறையிலிருக்கும் பொருட்கள் எல்லாம் புலப்படுகின்றன.

எல்லாப் பொருட்களையும் பார்ப்பதற்கு மெழுகுவர்த்தி தேவைப்பட்டது. ஆனால், அந்த மெழுகுவர்த்தியை நாம் பார்க்க வேண்டுமானால், அதைக் காட்டுவதற்கு இன்னுமொரு மெழுகுவர்த்தி தேவைப்படுமா? அறையிலிருக்கும் பொருட்களையெல்லாம் காட்டும் மெழுகுவர்த்தியானது, தனது வெளிச்சத்தில் தன்னையும் காட்டிக் கொள்கிறது.

இப்படி எதுவெல்லாம் தன்னுடைய சுயத்தன்மையால் அந்த வலியானது தனது இருப்பைத் தானே அறிவித்துக் கொள்கிறது. மெழுகுவர்த்தியானது எப்படி தனது வெளிச்சத்தால் தன்னைத்தானே காட்டிக் கொண்டதோ, அப்படி நமக்கு ஏற்பட்ட வலியும் தனது உணர்ச்சியால் தன்னைத் தானே காட்டிக் கொள்கிறது.

இதை உடல் உணர்ச்சி அல்லது Bodily Consciousness என்று கூறுகிறோம். 'நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் வருத்தமாக இருக்கிறேன். நான் கோபமாக இருக்கிறேன்' என்று கூறுகிறோம். இவை இருப்பதை நாம் எப்படி அறிந்து கொண்டோம்? இவற்றை அறியவும் நமக்கு மெழுகுவர்த்தி வெளிச்சம் தேவைப்படவில்லை. மனோரீதியான மகிழ்ச்சி, வருத்தம் போன்ற இத்தகைய உணர்ச்சிகளும் தமது இருப்பு நிலையைத் தாமே அறிவித்து, வெளிப் படுத்திக் கொண்டுவிடுகின்றன. இவற்றை மனஉணர்ச்சிகள் அல்லது Psychological Consciousness என்கிறோம். இந்த உடல் மற்றும் மன உணர்ச்சிகள் இரண்டுமே சுய ஒளி உடையவை: சுய விளக்கம் உடையவை.

நமக்கு முன்னே உயர்ந்து வளர்ந்த அரசமரம் ஒன்று உள்ளது.

அதில் குயில் ஒன்று உட்கார்ந்து கூவுகின்றது. மரமும் பறவையும் நமது கண்களில் காட்சிகளாகத் தெரிகின்றன. நாம் கண்களை மூடிக்கொண்டால் அந்தக் காட்சிகள் மறைந்துவிடுகின்றன. குயில் கூவுவது நமது காதில் ஒலியாகத் தெரிகிறது. நாம் நமது காதுகளை இறுக மூடிக்கொண்டால் அந்த ஒலியும் மறைந்து விடுகின்றது.

இதைப் போன்று நமது காலில் ஏற்பட்ட வலியையும், மனதில் தோன்றிய இன்ப துன்ப உணர்ச்சிகளையும் மறைத்துவிட முடியுமா? அவற்றை எவராலும் மறைக்க முடியாது. ஏனெனில் அவை சுய ஒளி உடையவை : சுய விளக்கம் உடையவை.

இவற்றைத்தான் உணர்ச்சி அல்லது Consciousness என்கிறோம். இதைத் தான் அனாத்மா என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவை சுய ஒளி உடையது போல் தோன்றினாலும், உண்மையில் ஆன்மாவின் ஒளியைக் கொண்டே இவை இருப்புத் தன்மை உடையதாகத் தோற்றம் அளிக்கின்றன.

நாக்கில் ஏற்படும் இனிப்பு மற்றும் கசப்பு உணர்ச்சிகள் இருப்புத் தன்மையுடையது போல் தோன்றினாலும் நாக்கினுடைய உணரும் தன்மைதான் அவற்றுக்குக் காரணமாக உள்ளது. அதுதான் உண்மையான இருப்புநிலை. நமது மனஉணர்ச்சிகள் யாவும் அவை உண்மையிலேயே இருப்பதைப் போல் தம்மைக் காட்டி நம்மை ஏமாற்றி விடுகின்றன.

அவை இருப்புத் தன்மை உடையதுபோல் தோன்றினாலும் உண்மையில் அவை தற்காலிகமானவையே: தோன்றி மறையக் கூடியவையே. தோன்றி மறையும் மன உணர்ச்சிகளை நிரந்தரப்படுத்தும் தேவையற்ற போராட்டத்தினால் தான் அனைத்துப் பிரச்னைகளும் உருவாகின்றன.

அவை அனைத்தும் கானல் நீரைப் போன்றவைதான்.. நிழல்களைப் போன்றவைதான் என்பதைப் புரிய வைக்கவே சாஸ்திர ரீதியான இந்த அணுகுமுறை தோன்றியது. ஆன்மாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் செயல்பட்டு உணர்ச்சி களிலிருந்து Consciousnessலிருந்து விடுபட வைப்பதுதான் இதன் நோக்கம். இதுதான் சாஸ்திரங்கள் காட்டும் பாரம்பரிய அணுகுமுறை.

உணர்ச்சிகள் அனைத்துக்கும் ஆதாரமாக உணர்வுநிலை Awareness என ஒன்று உள்ளது என்பதைப் புரிந்துகொண்டால் போதும். ஆனால், பலரும் தங்களது உணர்ச்சிகளின் வழியாக அந்த ஆதார உணர்வுநிலையை ஆத்மாவை அறிந்துகொள்ளப் போராடித் தங்களது வாழ்க்கையையே இழந்து விடுகின்றனர். உண்மையில் நம்முடைய மனதின் செயல்பாடுகள் என்ன என்று அறிந்துகொள்வது மட்டுமே நமக்குத் தேவைப் படுகிறது.



அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி




**திருஅருட்பாவில் உள்ள ஆறுகால பூஜைகளின் தொகுப்பு மொத்தம் 600 பாடல்கள் கொண்ட சி.டி. வெளியீடு**

**சி.டி.தேவைக்கு**

**தொடர்புகொள்ள:**

# கே.ஆர்.யூகேஷ்குமார்

# 9962757343

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எஸ்.எஸ்.தணிகை அடுக்ககம், எண்:2,
மதுரைசாமிமடம் தெரு, திரு.வி.க.நகர்,
பெரம்பூர், சென்னை – 600011
தொலைபேசி: 64588584, 9600024878

அருள்ஜோதி

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com


## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மென்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கிகாரம் பெற்ற (பதிவெண் 24/239-2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மீக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு........................................ | ரூ.2000/– |
| உணவு................................................ | ரூ.5000/– |
| **சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட)............................ | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

அருளாளர் பதிவு படிவம்

பெயர்:

முகவரி:

பதிவெண்: __________

## உங்கள் கவனத்திற்கு...

| | | |
|---|---|---|
| மாதப்பூசத் திருநாள் | : | 6.03.2020 |
| பூஜை நேரம் | : | மாலை 6.45 மணி |

**அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருள்பெற வேண்டுகின்றோம்.**

அன்புடையீர் வணக்கம்! நமது அருள்ஜோதி அன்ன ஆலயத்தில், சன்மார்க்க அறக்கட்டளையின் சார்பாக உலக சமாதானம் மற்றும் மக்கள் உடல் ஆரோக்கியம் பெற ஒவ்வொரு வியாழக்கிழமையும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகின்றது. இந்தப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதன் மூலம், உங்களுடைய எல்லா விதமான பிரச்சனைகளும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருளினால் தீர்க்கப்படுகின்றன. அதனால், தாங்களும், பிரார்த்தனையில் கலந்துக்கொண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளோடு வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று குறையின்றி வாழ வேண்டுமென்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அனைவரும் வருகை தந்து வள்ளல் பெருமானாரின் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

நேரம்: மாலை 3.30 மணி அருள்ஜோதி அன்ன ஆலயம், எண்:33, முதன்மை சாலை, கென்னடி சதுக்கம், திரு.வி.க.நகர், பெரம்பூர், சென்னை – 600011 தொடர்புக்கு: 9003034056, 044–25589575

சன்மார்க்கம் வேதாத்திரியம் மருத்துவம் சொற்பொழிவுகள் டி.வி.டி. க்களில் வேண்டுமா...




**அணுகவும்:**
**திரு.கண்ணன், 9840489703**

# அருள்ஜோதி அன்ன ஆலயத்தின் வேண்டுகோள்

## பசி தீர்ப்பது பரம புண்ணியம்

அன்புடையீர் வணக்கம்!!!

தினசரி 5000 அன்பர்களுக்கு பசியாற்றுவித்தல் பணியினை தொடர்ந்து 20 வருடங்களாக அருள்ஜோதி அன்ன ஆலயம் செய்து வருகின்றது. ஆலயத்தின் உறுப்பினர்களாக இருக்கும் 10000 அரிசி தொண்டு அன்பர்கள் அளிக்கும் அரிசி, பருப்பு மூலமாக இப்புண்ணியத் தொண்டு, தொய்வில்லாமல் நடைபெற்று வருகின்றது. தற்போது, நாளுக்கு நாள் பசியாறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், ஆலயத்திற்கு கூடுதலாக அரிசி தேவைப்படுகின்றது. அரிசித் தொண்டு அன்பர்கள், புழுங்கலரிசி மற்றும் பச்சரிசி அதிகளவில் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அரிசி அதிகம் அளிப்பவர்கள், ஆலயத்திற்கு தகவல் தெரிவிக்கும் பட்சத்தில், தங்கள் இல்லத்திற்கே ஆலய சேவாதாரிகள், நேரில் வந்து பெற்றுக் கொள்வர் எனத் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி!!!

**தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 044-25570770, 25589575**



# புண்ணியத்தைத் தேடி...



## அருள்ஜோதி வாசகர்களுக்கு வணக்கம்!

மக்களின் பசியினை அகற்ற நாள்தோறும் அன்ன தர்மம் செய்து வரும் அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றுமொரு அங்கமாக கோயம்பேடு மார்க்கெட்டில் பணி செய்யும் மக்களின் பசியைப் போக்குவதற்கு நாள்தோறும் கஞ்சிவார்த்தல் பணியை செய்து வருகின்றது. இந்தப் புண்ணியத் தொண்டில் பங்கு பெறுவதற்கும், கோயம்பேடு மார்க்கெட்டில் கஞ்சி ஊற்றுவதற்கும் தொண்டுள்ளம் கொண்ட நபர்கள் தேவைப் படுகிறார்கள்.

**தொடர்புக்கு: 044-25570770**





**அருள் ஜோதி
ஆன்-லைன் டியூப் டி.வி.
நிகழ்ச்சி
சன் மார்க்கர்களின்
கருத்துக்கள் ...**



#vallalar #Arujothi
இது எதனால் ஆனது?/ Which substance is it made up of?/Thiru.Alagar Ramanujam Ayya
1,375 views • Dec 3, 2019



#vallalar #Arujothi
என் வாழ்வில் சன்மார்க்கம்/திரு. சுப்பிரமணிய பாரதி ஐயா
773 views • Dec 16, 2019





#vallalar #Arujothi
திருபாணந்த சுவாமிகள் ஏன் ஞானசபையை விட்டு சென்றார்? Thiru.Umapathi Ayya
7,120 views • Aug 31, 2019



#vallalar #Arujothi
வள்ளலார் பெற்ற தீட்சைகள்/Dayavu.SMT.Siva Rajeswari Amma/Part-1
1,135 views • Dec 6, 2019





#vallalar #Arujothi
வள்ளலார் வழி நடந்தால் வருகின்ற வளங்கள்/Thiru.Saravanan ayya/Part-1
10,889 views • Oct 8, 2019

## அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை Internet UTube மூலம் காணலாம்.


**ARULJOTHI TELEVISION FOUNDATION**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT:9003034056, 044-25582243**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI TELEVISION FOUNDATION
A/C.No.:35562632395
STATE BANK OF INDIA
THIRU.VI.KA.NAGAR BRANCH
IFSC CODE: SBIN0016283**


**Published by: S. Dhanalakshmi ,**

**Published from No.:17, Main Road, Kennady Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thavathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012**

# நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

ஒவ்வொரு இல்லறத்தாரும் மாதம் மூன்று கிலோ அரிசியும், அரை கிலோ பருப்பும் கொடுப்பதன் மூலம், மாதம் முப்பது நாளும் தினமும் ஒருவருக்கு அன்னதர்மம் செய்ததன் பலனைப் பெறமுடியும். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் சென்னையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நாள்தோறும் அன்னதர்மம் நடைபெறச் செய்யலாம். இந்தப் புண்ணிய தொண்டில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முகவரியை ஆலயத்துக்கு தெரிவித்தவுடன் ஆலயத்தைச் சேர்ந்த சேவாதாரிகள் தாங்கள் செலுத்தும் தருமத்தை நேரில் வந்து பெற்று கொள்வார்கள். மேலும், தங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற சிறப்பு நாட்களில் அன்ன ஆலயத்தின் மூலம் தாங்கள் விரும்பும் ஆலயத்தில் அன்னதர்மம் செய்யலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

## அன்ன தர்மத்தின் சிறப்புகள்

1.அன்னதருமம் செய்வதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

2.நம் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுத்தலே.

3.அனைத்து நோய்களும் நீங்க அருமருந்து அன்னம் கொடுப்பதே ஆகும்.

4.மனக்குறைகள் நீங்கி மகிழ்வுடன் வாழவைப்பது அன்ன தருமமே

5.தொழில் சிறந்து விளங்க அன்னதருமம் செய்வோம்.



6.கடன்கள் நீங்கி மன அமைதி பெற அன்னதர்மம் செய்வோம்.

7.போதும் என்ற மனநிறைவுடன் ஓர் ஆன்மா கூறுமளவுக்கு ஒரு தருமம் உண்டென்றால் அது அன்னதருமமே. அன்னதருமம் என்ற திறவுகோலைக் கொண்டுதான் எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவிக்க முடியும். நம் சந்ததியினருக்கு நாம் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுப்பதே.

**இந்தப் புண்ணியத் தொண்டில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**பசி தீர்ப்பது** — **பரம புண்ணியம்**


தயவுத்திருமதி. **தனலட்சுமி அம்மையார்,**
எண்:2, அருட்பெருஞ்ஜோதி நகர், மதுரைசாமிமடம் தெரு,
பெரம்பூர், சென்னை – 11.
**தொலைபேசி:9003034056, 044-25589575**



Owned, Published: Thavathirumathi. Dhanalakshmi Ammaiyaar, Published from No.:33, Main Road, Kennady Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 and Printed by Bharani-press Editor: Thavathirumati. Dhanalakshmi Ammaiyaar

ARULJOTHI Tamil Monthly Magazine
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA No.70781/ 99
Postal Registration No.TN/CCN/391/2018–2020 & WPP No. TN/PMG(CCR)/WPP-433/2019-2020
Date of Publication: 10th of Every month
அஞ்சல் நாள் : மார்ச் 2020
10-03-2020

# அன்பார்ந்த அரிசித் தொண்டு அருளாளர்கள் கவனத்திற்கு!

தாங்கள் இதுகாறும் மாதாமாதம் அளித்துவரும் காணிக்கையின் மூலம், பல்வேறு மக்களின் பசிப்பிணியினைப் போக்குவதற்கு பல்வேறு பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

பிரதி மாதம் குறிப்பிட்ட தினங்களில் ஆலய சேவாதாரிகள் தங்களது இல்லத்திற்கு நேரிடையாக வந்து, தாங்கள் அளிக்கும் காணிக்கையினை பெற்று செல்கின்றனர். இருந்த போதிலும் சிற்சில சமயங்களில், சில அருளாளர்களின் இல்லத்திற்கு இயலவில்லை.

இதனால், அருளாளர்கள் தங்களது வங்கி கணக்கில் **NACH** திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி விடலாம். இத்திட்டம் குறித்து, விரிவாக, ஆலய சேவாதாரிகள் தங்களிடம் தெரிவிப்பார்கள்.

மேலும், இதுவரை ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று (1253) அரிசித் தொண்டு அருளாளர்கள் இத்திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி வருகின்றனர்.

தாங்களும் தங்களது காணிக்கையினை வங்கிமூலம் செலுத்தும் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு, தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

